**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W.** 7

Name : திருமதி. டாக்டர். ராமேஸ்வரி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 16.07.2025**

Accused Present.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது குருந்தன்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். 28.02.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு பத்மனாபபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்த போது ஜஸ்டின் ராஜ் (52/23) என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதித்த போது தன்னை தெரிந்த ஒரு நபர் 28.02.2023ம் தேதியன்று காலை 08.00 மணியளவில் நல்லவிளை என்ற இடத்தில் வைத்து பைக்கில் சென்று கொண்டிருந்த போது கம்பியால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்து பார்த்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள்இருந்தது.

1) வலது முகத்தில் , வலது கண்ணுக்கு கீழ் ¼ x ¼ cm அளவிலான சிதைந்த காயம் இருந்தது. அதை சுற்றிலும் வீக்கம் காணப்பட்டது அந்த வீக்கம் 1 x 1 x 1 cm அளவில் காணப்பட்டது. அந்த சிதைந்த காயத்தில் ரத்தக்கசிவு காணப்பட்டது

2) வலது காலில், வலது தொடையில் வலது முட்டியை சுற்றிலும் வலி இருந்ததாக கூறினார்.

3) இடது கணுக்காலில் ½ x ¼ cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். 06.03.2023ம் தேதி மருத்துவ சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன் அந்த காயச்சான்று அ.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபரை அவரது சகோதரர் சேம்ராஜ் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். 2வது காயம் பொய்யாக இருக்க வாயப்புள்ளது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது எதிரி கம்பியால் தாக்கியதாக கூறினார். ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழும் போது காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. கம்பியால் ஓங்கி கன்னத்தில் அடிக்கும் போது நான் சொன்னதை விட பெரிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. கயாம்பட்டவருக்கு நெஞ்சில் காயங்கள் எதுவும் இல்லை. காவல்துறைக்கு 10.00 மணிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் சொன்ன விபரம் காயச்சான்றில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**Deposition of P.W.**8

Name : திரு. ரமேஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:16.07.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். தற்போது பரசேரியில் வசித்து வருகிறேன். 28.02.2023ம் தேதி 10.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது தக்கலை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று 11.00 மணிக்கு மருத்துவமனை சென்று அங்கு சிகிக்சையில் இருந்த செல்லையன் மகன் ஜஸ்டின் ராஜ் என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று 12.00மணிக்கு நிலையம் வந்த நிலைய குற்ற எண். 59/2023 பிரிவுகள் 341, 294(பி), 307 , 506(2) இ.த.ச படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.5.அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

கயம்பட்ட நபர் காவல்துறையில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். காயம்பட்டவரை எனக்கு நன்றாகத் தெரியும். காயம்பட்ட நபர்

எழுத்து பூர்வமான புகாரை கொடுத்தார் என்றால் சரிதான். புகாருடன் வாகனத்தின் பதிவுச்சான்றை இணைத்து தரவில்லை. காயம்பட்டவர் பயணம் செய்த வாகனம் TN 75 M 0940 என்றால் ஞாபகமில்லை. முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டேன். காவல் ஆய்வாளர் என்னை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே விசாரித்து விட்டார்கள். புகாரில் தனது மனைவி ஷீலா என்பவருடன் தக்கலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாலும், எதிரி மீதுள்ள முன் விரோதத்தாலும் பொய்யான புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.